**செய்தி வெளியீடு எண்: 195** **நாள்: 14.03.2018**

**தமிழ் வளர்ச்சித் துறை**

**சென்னை மாவட்ட**

**ஆட்சிமொழிக் கருத்தரங்கம் பயிலரங்கம்**

தமிழ் நாட்டின் ஆட்சிமொழி ''தமிழ்மொழி'' என அறிவிக்கப்பட்டு சட்டம் இயற்றப்பட்ட நாள்முதலாக அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் விரைந்தும், முனைந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ''இன்றும் தமிழ் என்றும் தமிழ்'' என்ற அரசின் விழுமிய நோக்கம் வெற்றிபெற, தமிழ் வளர்ச்சித் துறையால் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் ஆட்சிமொழிக் கருத்தரங்கம், பயிலரங்கம் அரசு அலுவலர் பணியாளர்களுக்கு நடத்தப்பெற்று வருகிறது. அவ்வகையில் சென்னை மாவட்டத்தின் கருத்தரங்கம், பயிலரங்கம் சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகக் கலையரங்கத்தில் 14.03.2018 ஆம் நாளன்று காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. இதில் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர். இக்கருத்தரங்கத்தில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் முன்னுரையும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.இரா.வெங்கடேசன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றி ஆட்சிமொழித் திட்டத்தில் சிறந்து விளங்கிய துறைத் தலைமை அலுவலகத்திற்கும் மாவட்ட நிலை அலுவலகத்திற்கும் கேடயம் சான்றிதழ் வழங்கினார். முன்னதாக தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் திரு.ம.சி. தியாகராசன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியின் முடிவில் சென்னை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் (பொ) திரு. த. காமராசு அவர்கள் நன்றியுரையாற்றினார். இதனைத் தொடந்து பிற்பகல் ஆட்சிமொழிப் பயிலரங்கமும் 15.03.2018 ஆம் நாளன்று முற்பகல் நிகழ்வில் சென்னை பல்கலைக் கழக மேனாள் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பேரா.முனைவர் ந. தெய்வசுந்தரம் அவர்கள் அம்மா மென்தமிழ் தமிழ்ச் சொல்லாளர் மென்பொருள் செயல் விளக்கமும் அளிக்க உள்ளார். அன்று பிற்பகல் தமிழாசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியும் நடைபெறவுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**